# வங்கிமுறைகள்

## உங்கள் பணத்தை நிர்வகித்தல் மெய்த்தகவல் தாள்



உங்கள் பணத்தைப் பாதுகாப்பாக வைப்பதற்குரிய இடங்கள்தான் வங்கிகள்

### வங்கிக்கணக்கு என்றால் என்ன?

வங்கிக்கணக்கு என்பது உங்கள் பணத்தை வங்கியில் வைத்திருக்கும் முறையாகும். அது உங்கள் பெயரில் இருக்கும். உங்கள் கணக்கில் நீங்கள் பணத்தைப் போட்டால் அது வைப்புத்தொகை என்று அழைக்கப்படும். நீங்கள் உங்கள் கணக்கிலிருந்து பணத்தை எடுத்தால் அது எடுப்புத்தொகை எனப்படும்.

### வங்கிக்கணக்கு எவ்வாறு வேலை செய்கிறது?

உங்கள் வங்கி உங்கள் பணத்தின் வைப்புத்தொகை (உள்ளே போட்டது) மற்றும் எடுப்புத்தொகை (வெளியில் எடுத்தது) ஆகியவற்றைப் பதிவு செய்கிறது. உங்கள் வங்கி இருப்பு என்பது அச்சமயத்தில் உங்கள் கணக்கில் இருக்கும் பணத்தொகையாகும். வங்கியில் நீங்கள் கணக்கு ஒன்றைத் துவங்கினால் உங்களுக்கு ஒரு பற்று அட்டையும் தனிப்பட்ட அடையாள எண்ணும் (PIN) கொடுக்கப்படும்.

### பற்று அட்டை (debit card) என்றால் என்ன?

பற்று அட்டை என்பது உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து பணம் எடுக்க அல்லது பொருட்கள் மற்றும் சேவைகளுக்குக் கொடுக்கப் பயன்படும் பிளாஸ்டிக் அட்டையாகும். அது உங்கள் வங்கிக்கணக்குடன் இணைக்கப்பட்டு உங்கள் பணத்தை மட்டும் பயன்படுத்தும்.

### தனிப்பட்ட அடையாள எண் (PIN) என்றால் என்ன?

அது உங்கள் வங்கிக்கணக்கை அணுகப் பயன்படும் 4 இலக்கமுள்ள தனிப்பட்ட எண்ணாகும்

### உங்கள் பணத்தை எவ்வாறு அடையமுடியும்?

உங்கள் கணக்கிலிருந்து பணத்தை எடுப்பதற்கு உங்களுக்குப் பற்று அட்டை மற்றும் தனிப்பட்ட அடையாள எண் (PIN) தேவைப்படும்.

**தானியங்கி காசளிப்பு இயந்திரம்:** தானியங்கி காசளிப்பு இயந்திரம் என்பது வங்கி வாடிக்கையாளர்கள் வங்கிக் கிளைக்குச் செல்லாமல், தங்களுடைய கணக்கிலிருந்து பணத்தை எடுக்க உதவும் இயந்திரமாகும்

**விற்பனை மையத்தில் மின்னணு நிதிப் பரிமாற்றம்:** விற்பனை மையத்தில் மின்னணு நிதிப் பரிமாற்றம் (EFTPOS) என்பது கையோடு பணம் உங்களுடன் கொண்டு செல்லத் தேவையில்லாமல் பொருட்கள் மற்றும் சேவைகளுக்குப் பணம் செலுத்தும் வழிமுறையாகும்

### நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்:

- வங்கிமுறை என்பது நீங்கள் உங்கள் பணத்தை வங்கியில், கிரெடிட் யூனியனில் அல்லது கட்டுமானக் கழகத்தில் பாதுகாப்பாக வைத்திருப்பதாகும்.
- தனிப்பட்ட அடையாள எண் (PIN) என்பது உங்கள் வங்கிக் கணக்கை அணுக உதவும் தனிப்பபட்ட எண்ணாகும்.
- உங்கள் தனிப்பட்ட அடையாள எண்ணை யாரிடமும் கூறவேண்டாம்.
- உங்கள் தனிப்பட்ட அடையாள எண்ணை உங்கள் வங்கி அட்டையுடன் வைத்திருக்க வேண்டாம்.

உங்கள் வங்கிக் கணக்கு மற்றும் கட்டணங்கள் பற்றிய மேலதிக விவரங்களுக்கு, உங்கள் வங்கியிடம் கேட்கலாம் அல்லது உங்கள் வங்கியின் இணையதளத்துக்குச் செல்லலாம்.

### லிசாவுக்கு வங்கிக் கட்டணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது

திங்கட்கிழமை ஆங்கில வகுப்புக்குச் செல்வதற்கு ரயில் டிக்கெட் வாங்க லிசாவுக்குப் பணம் தேவைப்பட்டது. ஆகவே தன்னுடைய காமன்வெல்த் வங்கியின் தானியங்கி காசளிப்பு இயந்திரத்திலிருந்து 20 டாலர்கள் எடுக்கிறார். செவ்வாய்க்கிழமை அவருடைய படிப்புக்காக ஒரு புத்தகம் வாங்கத் தேவை இருப்பதால் புத்தகக்கடைக்கு வெளியிலுள்ள வெஸ்ட்பேக் தானியங்கி காசளிப்பு இயந்திரத்திலிருந்து 20 டாலர்கள் எடுக்கறார். புதன்கிழமை திரைப்படத்துக்குச் சென்று திரைப்பட அரங்கிலுள்ள ANZ தானியங்கி காசளிப்பு இயந்திரத்திலிருந்து 30 டாலர்கள் எடுக்கறார்.

லிசாவின் சென்டர்லிங்க் பணம் அவருடைய வங்கிக்கணக்கில் வியாழக்கிழமை வருமென அவருக்குத் தெரியும். பணம் தன்னுடைய கணக்கில் வந்துவிட்டதா என்று சரிபார்க்க அவர் உள்ளூர் வணிக மையத்திலுள்ள காமன்வெல்த் வங்கியின் தானியங்கி காசளிப்பு இயந்திரத்துக்குச் சென்கிறார். அவர் எதிர்பார்த்ததற்கும் குறைவான பணம் அவருடைய கணக்கில் இருப்பதைப் பார்த்து லிசா ஆச்சரியமடைகிறார். அவர் வாடகை கொடுப்பதற்கும், உணவு வாங்குவதற்கும் பணம் தேவையாய் இருப்பதால் அவருக்குக் கவலையாயிருக்கிறது

லிசாவுக்கு தன்னுடைய கணக்கில் ஏன் அதிக பணம் இல்லையென்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. தானியங்கி காசளிப்பு இயந்திரம் தவறுதலாக அவருக்குத் தப்பான தொகையைக் கூறிவிட்டதோ என வியக்கிறார். ஆகவே அவர் அவருடைய வங்கிக்குச் சென்று அங்கு வேலை செய்யும் சந்தீப் என்பவரிடம் பேசுகிறார்.

அவருடைய கணக்கில் இருக்கும் தொகை சரிதான் என சந்தீப் லிசாவுக்கு விளக்குகிறார். அத்துடன் அவர் பயன்படுத்திய சில தானியங்கி காசளிப்பு இயந்திரங்களின் மூலம் பணம் எடுத்தற்காகக் கட்டணம் செலுத்தியபடியால் லிசாவுக்கு குறைந்த பணம் உள்ளதாக சந்தீப் மேலும் விளக்குகிறார். அவருடைய வங்கியைச் சாராத தானியங்கி காசளிப்பு இயந்திரத்தைப் பயன்படுத்தியதாலும், அவருடைய தானியங்கி காசளிப்பு இயந்திரத்திலிருந்து ஒரு வாரத்தில் அதிக முறை பணம் எடுத்தபடியாலும் லிசா கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது என்று சந்தீப் விளக்குகிறார்.

ஒரு வாரத்துக்கு எவ்வளவு பணம் தேவைப்படும் என்பதைக் கண்டறிய லிசா வரவுசெலவுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும் என்று சந்தீப் யோசனை சொல்கிறார். அதன்பின் தானியங்கி காசளிப்பு இயந்திரத்திலிருந்து ஒரே பரிமாற்றத்தில்தான் லிசா பணம் எடுக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்துகிறார். அதுதான் பல பணப்பரிமாற்றங்களின் காரணமாக உண்டாகும் கட்டணத்தைத் தவிர்ப்பதற்கான ஒரே வழியாகும்.

MONEYSMART

© ASIC 2012 அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

This page has been intentionally left blank.

© ASIC 2012 அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை